# ரயில் இன்ஜின் சோதனை ஓட்டம்

சென்னை, செப். 6–

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, இரண்டாவது பாதையில், ரயில் இன்ஜின் சோதனை ஓட்டம், நேற்று முன்தினம் நடந்தது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில், தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, இருவழி சுரங்கப்பாதை பணி நடந்து வந்தது. இப்பாதையில் ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., அரசினர் தோட்டம், சென்ட்ரல், உயர்நீதிமன்றம், மண்ணடி மற்றும் வண்ணாரப்பேட்டை நிலையங்கள் உள்ளன.

இப்பாதை பணி முடிந்து, தேனாம்பேட்டை டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, ஆக., 23ம் தேதி, ஒரு வழி பாதையில், டீசல் இன்ஜின் இயக்கி சோதனை நடத்தப் பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம், தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, இரண்டாவது சுரங்கப் பாதையில், டீசல் இன்ஜின் இயக்கி, சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது.

மெட்ரோ ரயில் சுரங்கப்பாதை கட்டுமான பிரிவு தலைமை பொதுமேலாளர், வி.கே.சிங் மற்றும் அதிகாரிகள், இப்பாதையில், காலை, 11:00 மணியில் இருந்து, மாலை, 4:00 மணி வரை, டீசல் இன்ஜின் இயக்கி, சோதனை நடத்தினர்.

இதையடுத்து, இப்பாதையில் விரைவில், மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடத்தப்படும். டிசம்பர் அல்லது அடுத்தாண்டு ஜனவரியில், பயணியர் ரயில் போக்குவரத்து துவங்கப்படும் என, அதிகாரிகள் தெரிவித்தனர்.